# புதுச்சேரி யூனியன் பிரதேசம்
# காரைக்கால் நகராட்சி
காரைக்கால் - 609 602

எண்.58-3/KM/SWM/2011 நாள் : 16.02.2011

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

## நகர பகுதியில் குப்பைகளை அகற்றுவதற்கான முன் தகுதி கோருதல்

காரைக்கால் நகராட்சியால், நகரைச் சுத்தம் செய்வதற்கும் குப்பைகளை எடுத்துச் சென்று பறவைபேட் அருகில் உள்ள, நகராட்சி குப்பைகொட்டுமிடத்தில் கொட்டுவதற்கும் விருப்பமுள்ள கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றுள்ள பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், நிறுவனங்கள் மற்றும் பதிவு பெற்ற தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து **"மூடி முத்திரையிடப்பட்ட முன் தகுதி விண்ணப்பங்கள்"** வரவேற்கப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் நகர பகுதிகளில் (வார்டுகளில்) சுத்தம் செய்த குப்பைகளை எடுத்துச் செல்லும் வேலைக்கு 3 மெட்ரிக்டன் சுமை ஏற்றும் திறனுள்ள வாகனம் குறைந்தபட்சம் **ஒன்று** சொந்தமாக அல்லது குத்தகைக்கு வைத்திருக்க வேண்டும். விண்ணப்பத்துடன் டிராக்டர் மற்றும் டிரெய்லர்க்கான R.C. Book Copy இணைத்திருக்க வேண்டும். குத்தகைக்கு எடுத்திருந்தால் R.C. Book Copy-யுடன் குத்தகை விடுபவரிடமிருந்து எழுத்து மூலம் வாடகை ஒப்பந்தம் பெற்று இணைக்க வேண்டும். மேற்கூறிய இணைப்புகள் இல்லை என்றால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். மேற்படி வாகனம் ஏற்றிய குப்பைகளை தானே கவிழ்த்து கொட்டக்கூடிய அமைப்புள்ள (Tipper Type) வாகனமாக இருத்தல் வரவேற்கத்தக்கது.

2. விண்ணப்பதாரர் குப்பைகளை அகற்றுதல், வீதிகள் மற்றும் கழிவுநீர் வாய்க்கால்களைச் சுத்தம் செய்தல், குப்பைகளை தரம் பிரித்து எடுத்துச் செல்வது போன்ற பணியினை திறமையுடன் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். முன் அனுபவம் உள்ளவராக இருந்தால், முன்னுரிமை வழங்கப்படும்.

3. விண்ணப்பதாரர், ஒப்பந்தத்தின் ஒரு மாத தொகைக்கு ஈடான (தோராயமாக ரூ.65 ஆயிரத்திலிருந்து ரூ.1.50 லட்சம் வரை) தொகையை பணியாணை பெறும்முன் காப்புறுதித் தொகையாக ஒரே தவணையில், செலுத்தக்கூடிய நிதி வசதி உடையவராக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர் பணிக்கான அனைத்து உபகரணங்களையும் பணியாளர்களுக்கு போதுமான அளவுக்கு அளிக்கக்கூடிய ஆற்றலுள்ளவராக இருத்தல் வேண்டும்.

5. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை மேற்கூறிய முக்கிய இணைப்புகளையும் இணைத்து **08.03.2011 மாலை 5.00** மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். பதிவுக்கட்டணமாக ஆணையர், காரைக்கால் நகராட்சி என்ற பெயரிடப்பட்ட ரூ.5,000/-க்கான வரைவோலையை(Demand Daft) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். குடும்ப அட்டையின் நகலை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேல் விண்ணப்பித்து இருந்தால் விண்ணப்பங்களுல் முன்னதாக பதியப்பட்ட விண்ணப்பத்தை மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பதாரர் சரியான விலாசம் தரவேண்டும், விலாசத்திற்கு ஆதாரமாக தங்கள் பெயரில் உள்ள Telephone Bill, Electricity Bill, Water Bill, Passport Copy போன்றவைகளில் ஏதாவது ஒன்றை அவசியம் இணைக்க வேண்டும்.

8. குலுக்கலில் கலந்து கொண்டு, வேலை கிடைக்கப் பெறாதவர்களுக்கு தாங்கள் செலுத்திய காப்புத் தொகையைத் திரும்பப்பெற இயலாது. கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறும் தேதி மற்றும் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு குலுக்கல் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

9. சுத்தம் செய்யப்பட வேண்டிய நகர பகுதிகள், சாலைகள், செய்ய வேண்டிய ஒட்டு மொத்த பணிகள் மற்றும் விதிமுறைகளை காரைக்கால் நகராட்சி அலுவலகத்தில் எழுத்து மூலமாக விண்ணப்பித்து ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மற்றும் அதற்கான விற்பனை வரி முதலியவற்றை செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான **கடைசி நாள் 04.03.2011 மாலை 5.00 மணி** வரை.

10. மேலும் இது தொடர்பான தகவல் பெற அலுவலக நேரத்தில் நகராட்சி அலுவலகத்தை அணுகி தேவையான விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி எண். 04368 - 222427, 221412,
செல் பேசி எண். 9443384585

(ஜோஸ் பேட்டன்)
**ஆணையர்**

**பிறப்பு/ இறப்பு பதியப்படுதல் அவசியம்**
**நகராட்சி வரி அனைத்தையும் கால தாமதமின்றி செலுத்தவும்**
**நகரின் தூய்மை நம்கெல்லாம் பெருமை**